# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 04 செவ்வாய்க்கிழமை | 21.10.2025 | கதிர் 346




# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை படுகொலையின் 38 ஆவது நினைவேந்தல்







யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 68 பேரின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று நடைபெற்றன.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல 7

# செவ்வந்தி விடயத்தில் தவறான அணுகுமுறை

## ஊடகக் கண்காட்சி எதற்கு என்று விமல் கோபாவேசம்



கொழும்பு, ஒக். 21

"வெளிநாட்டில் வைத்து கே.பியைக் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வந்தபோது ஊடகக் கண்காட்சி காண்பிக்கப்படவில்லை. எனினும், செவ்வந்தி விடயத்தில் அவ்வாறு நடப்பது தவறான அணுகுமுறையாகும்." - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரசன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"வெளிநாட்டில் கைது செய்யப்பட்டு நாட்டுக்குக் கொண்டுவரப்படும் குற்றவாளி விமானத்தில் இறங்குவது முதல் எல்லாத் தகவல்களும் மிகவும் சுவாரஷ்யமாக ஊடகங்களில் வெளியாகின்றன. ஊடகக் கண்காட்சி காண்பிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் இருந்த அரசுகள், இதை விடவும் பயங்கரமான குற்றவாளிகளை வெளிநாட்டில் கைது செய்து அழைத்து வந்துள்ளன. உதாரணம் கே.பி. என்பவரைக் கைது செய்து நாட்டுக்குக் கொண்டு வந்தபோது, அவர் எப்படி வந்தார் என்பதுகூட யாருக்கும் தெரியாது.

செவ்வந்தி விடயத்தில் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளைப் பார்க்கும்போது, பிரபலமாவதற்கு இதுதான் வழி என்ற தவறான உணர்வு சிறார்கள் மத்தியில் ஏற்படக்கூடும்.

எமது நாட்டு விளையாட்டு வீரர்கள் வெளிநாடுகளில் சென்று பதக்கங்கள் வென்று வரும்போது, அவற்றுக்கு ஏன் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. நான் ஊடகங்களைக் குற்றஞ்சாட்டவில்லை. பொலிஸார் இதனை ஊடகக் கண்காட்சியாக்கியுள்ளனர்." - என்றார்.

## கசிப்பு உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் யாழ்ப்பாணத்தில் வசமாகச் சிக்கிய 29 பேர்



யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வார காலப் பகுதியில் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது, 45 போத்தல் கசிப்பு, கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள், 7

## முதலை இழுத்துச் சென்ற மீனவர் சடலமாக மீட்பு!



அம்பாந்தோட்டை, ஒக். 21

அம்பாந்தோட்டை, ஹுங்கம, கலமெட்டிய கடற்கரை பகுதியில் முதலை இழுத்துச்சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 7


## யாழில் பொலிஸ் அவசர சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணம் நகரை மையமாகக் கொண்டு பொலிஸாரின் விசேட சேவை ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முதல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் சிறு குற்றங்கள் என்பவற்றைத் தவிர்க்கும் வகையில் இந்தச் சேவை யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமஹா தலைமையில் சம்பிரதாயபூர்வமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து 7



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ஹிக்கடுவ பகுதியில் துப்பாக்கி சூடு!

கொழும்பு, ஒக் .21

ஹிக்கடுவ, மாவதகம பகுதியில் துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

வீடு ஒன்றை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த அடையாளம் தெரியாத இரு நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் துப்பாக்கி சூட்டில் உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சுமார் 4 துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டதாகவும், வீட்டின் மதில் மற்றும் ஜன்னல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஹிக்கடுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செயலிழந்திருந்த அனைத்து அரச இணைய சேவைகளும் வழமைக்கு!

கொழும்பு, ஒக் .21

'இலங்கை அரச கிளவுட்' சேவையில் ஏற்பட்டிருந்த சிக்கல் நிலை தற்போது முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளதாக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை நிறுவனம் (ICTA) தெரிவித்துள்ளது.

'இலங்கை அரச கிளவுட்' சேவையில் ஏற்பட்டிருந்த சிக்கல் நிலை காரணமாக முடங்கியிருந்த அனைத்து அரச இணைய சேவைகளையும் இன்று (21) முதல் பொதுமக்கள் வழக்கம் போல் பயன்படுத்த முடியும் என இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

'இலங்கை அரச கிளவுட்' சேவையில் ஏற்பட்ட தொழிநுட்ப கோளாறு காரணமாக பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு (BMD) சான்றிதழ் வழங்கும் அமைப்பு, மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் (மேல் மாகாணம் தவிர) இணையவழியிலான வருமான வரி அமைப்பு (eRL 2.0), பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் அனுமதிச் சான்றிதழ் அமைப்பு, வணிகத் திணைக்களத்தின் இணைவழியூடான நாட்டின் உற்பத்தி சான்றிதழ் வழங்கும் முறை, ஓய்வூதியத் திணைக்களத்தின் ஓய்வூதிய அமைப்பு, வளிமண்டலவியல் திணைக்களம், நிறுவனப் பதிவாளர் திணைக்களம் மற்றும் இலங்கையின் கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகள் சபை உள்ளிட்ட 34 அரச நிறுவனங்களின் இணைய சேவைகள் கடந்த ஒருவார காலமாக செயலிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிலவுகின்ற அனர்த்த நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் கோரிக்கை!



கொழும்பு, ஒக் .21

நிலவுகின்ற அனர்த்த நிலைமைக்கு மத்தியில் அனர்த்த முகாமைத்துவக் குழு மூலம் வழங்கப்பட வேண்டிய சேவைகளை அவசரமாக முன்னெடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாத்தறை மாவட்டத்தில் நில்வலா அணைக்கட்டு பிரச்சினை காரணமாக அதிக அளவிலான விவசாய வயல் நிலங்கள் சேதமடையப் பார்க்கின்றன.

எமக்கு கிடைக்கும் தகவல்களின் படி இந்த அனர்த்த நிலையால், 3 மனித உயிர்கள் பலியாகியுள்ளன.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க நாமும் தயார்.

கடந்த காலங்களில், மக்கள் விடுதலை முன்னணியால் ரெட்ஸ்டார் படை போன்ற திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. இந்தத் திட்டங்களுக்கு மேலதிகமாக, அரசாங்கத்தாலும் வேலைத் திட்டமொன்றை முன்னெடுங்கள்.

விசேடமாக இந்த அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டத்திற்கு எமது (எதிர்க்கட்சியின்) பங்களிப்பையும் பெற்றுத் தருவோம். எதிர்காலத்தில் அதிகரிக்கும் என எதிர்பாரக்கப்படும் அனர்த்த நிலைமைக்கு மத்தியில் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை உடனடியாக நாளை காலையில் அல்லது இன்றைய தினத்திலேனும் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிககுமாறு எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# ருஹுணு பல்கலைக்கழக மாணவர் குழுவுக்கு மறியல்

கொழும்பு, ஒக். 21

மோதல் சம்பவத்தை அடுத்து கைது செய்யப்பட்ட ருஹூணு பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள் குழுவை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

மாத்தறை நீதிவான் நீதிமன்றம், இன்று செவ்வாய்க்கிழமை இந்த உத்தரவைப்பிறப்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போது மதிப்பெண்கள் தொடர்பான கருத்து வேறுபாடு காரணமாக மோதல் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிண்றது.

இதன்போது, ரு/ஹுணு பல்கலைக்கழக விவசாய பீடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஆறு மாணவர்கள் காயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவம் ஆரம்பத்தில் சுமுகமாக தீர்க்கப்பட்டாலும் நேற்று திங்கட்கிழமை மீண்டும் பதற்றங்கள் ஏற்பட்டதையடுத்து மோதல் இடம்பெற்றது.

நிலைமையைக் கட்டுப்படுத்தப் பல்கலைக்கழக நிர்வாகம் நேற்று மாணவர்களைப் பீட வளாகத்தில் இருந்து தற்காலிகமாக வெளியேற்றியுள்ளனர்.

# ஹர்ஷ தனக்குத்தானே தீங்கு விளைவித்துக் கொள்கிறார்



உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டு, முன்னெடுக்கப்படும்போது, சில திட்டங்களை அறிமுகப்படுத்தியவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும் என்று கூறிய சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, சுவ செரிய அம்புலன்ஸ் சேவையை மேம்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சியை எதிர்ப்பதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தனக்குத்தானே தீங்கு விளைவித்துக் கொள்கிறார் என்றார்.

உலகளாவிய சுகாதார முன்னேற்றங்கள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப சுவ செரிய அம்புலன்ஸ் திட்டத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என்று அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுவ செரியவின் நிறமும் சின்னமும் மாற்றப்பட்டுள்ளதாகக் கூறிய ஹர்ஷ டி சில்வா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

“புதிய லெட்டர்ஹெட்டில் இலங்கை அவசர அம்புலன்ஸ் சேவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அதே நேரத்தில் சுவ செரிய என்ற பெயர் கீழே சிறிய எழுத்துக்களில் காணப்படுகிறது.

“சுவ செரிய என்பது மருத்துவமனைக்கு முந்தைய பராமரிப்பு சேவையாகும். இது முதலுதவி வழங்கும் சேவை அல்ல” என்று கலாநிதி டி சில்வா கூறினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜெயதிஸ்ஸ, அம்புலன்ஸ் திட்டத்தை உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சியை எதிர்ப்பதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் டி சில்வா தனக்குத்தானே தீங்கு விளைவித்துக் கொள்கிறார் என்றும், லோகோ, நிறம் மற்றும் அனைத்தும் அப்படியே இருக்கும் என்றும் கூறினார். (ஐ)

# முறைகேடாக ஈட்டிய சொத்துகளை இனி எவரும் அனுபவிக்க முடியாது



கொழும்பு, ஒக் .21

நாட்டில் பல்வேறு தரப்பினரால் முறைகேடான விதத்தில் சொத்துக்களை சேகரிக்கும் நடவடிக்கையை முறியடிப்பதற்காக பொலிஸ் குற்றச் செயல்கள் வரும்படிகள் விசாரணைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அதற்கமைய போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் ஏனைய முறைகேடான விதத்தில் ஈட்டிய சொத்துகளை இனி எந்த தரப்பினரும் அனுபவிக்க முடியாது என பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

‘பொலிஸ் குற்றச் செயல்கள் வரும்படிகள் விசாரணைப் பிரிவு’ (பி.சி.ஐ.டி) பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தலைமையில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பங்கேற்புடன் நேற்று பொலிஸ் தலைமையகத்தில் அமைந்துள்ள பழைய கட்டிடம் ஒன்றில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக் காக 8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக பெறப்பட்டுள்ள போதும், தற்போதுள்ள அதன் கையிருப்பு 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே என கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 6 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு என்ன நடந்தது என்பது புதிராக உள்ளது. நாட்டினுள் பல்வேறு தரப்பினரால் முறைகேடான விதத்தில் சொத்துக்களை சேகரிக்கும் நடவடிக்கையை முறியடிப்பதற்காக இந்த விசேட பொலிஸ் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசத்தின் நன்மதிப்பை பெற்ற குற்றச் செயல்கள் வரும்படிகள், சட்டத்தின் பிரகாரம் இந்த பொலிஸ் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள பாதாள உலகக்குழு செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் வலையமைப்பை இல்லாதொழிப்பதற்கு இப்பிரிவின் ஊடாக நடவ டிக்கை எடுக்கப்படும். பாதாள உலகக்குழு தொடர்பான சட்ட மூலத்தை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நிகழ்நிலைப் பாதுகாப்பு திருத்தச் சட்டம் நீதி அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு மற்றும் வெளிநாட்டு விவகார அமைச்சு ஆகிய அமைச்சுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விசேட குழுவால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறெனினும் எதிர்வரும் 2 மாதங்களுக்குள் அப்பணிகள் பூர்த்தி செய்யப்படும். பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தை இல்லாமல் செய்து அதற்கு நிகரான புதிய சட்டத்தை கொண்டு வருவதற்கு அவசியமான குழு நியமிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இயற்றப்படும் சட்டங்கள் சமூகம் உணரும் வகையில் முறையாக அமுல்படுத்தப்பட வேண்டும். பொது மக்களுக்கு நீதி கிடைக்க உரிய நேரத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியம்.

பாதாள உலகச் செயற்பாடுகளை முறியடிக்கும் வகையில் இந்த புதிய பொலிஸ் பிரிவு தாபிக்கப் பட்டுள்ளது. போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் ஏனைய முறைகேடான செயற்பாடுகளினூடாக ஈட்டிய சொத்துகளை இனி எந்த தரப்பினரும் அனுபவிக்க முடியாது என தெரிவித்தார். 2025 ஆம் ஆண்டு 5ஆம் இலக்க குற்றச் செயற்பாடுகளின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விதிகளுக்கு அமைய, விசாரணை நடவடிக்கைகளுக்காக இந்த புதிய பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரிவின் மூலம், சட்டவிரோதமாகப் பணம், சொத்து மற்றும் மூலதனங்களை ஈட்டியது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர் நாயகம் ஒருவரின் தலைமையில் நிறுவப்பட்டுள்ள இந்த பிரிவுக்கு, பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட மூன்று வருட காலத்திற்கு இந்தப் பிரிவின் பணிப்பாளராக நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள அதேநேரம், இப் பதவி நியமனம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசங்க கரவிட்ட, குற்றப்புலனாய்வுத்திணைக்களம் மற்றும் நிதி மோசடிக் குற்றப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் செயற்படுகிறார்.

குற்றச் செயற்பாடுகளின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவின் மூலம், 34 அரச நிறுவனங்கள் குறித்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்று சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, எந்தவொரு முறையிலும் ஈட்டிய மூலதனங்கள் குறித்து விசாரணை நடத்த சட்டப்பூர்வமாக இந்தப் பிரிவுக்கு அதிகாரம் உள்ளதுடன், குற்றம் அல்லாத சொத்துகள் ஈட்டல் குறித்து சிவில் வழக்குகள் தாக்கல் செய்யும் சாத்தியக்கூறும் இருப்பதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. பொது மக்களும் இந்தப் பிரிவில் நேரடியாக முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க வாய்ப்பு உள்ளதுடன், சட்டப்பூர்வமற்ற முறையில் ஈட்டிய சொத்துக்களை 30 நாட்களுக்குள் தடை செய்ய அல்லது கையகப்படுத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# 11 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 21

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் 11 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையானது இன்று செவ்வாய்க்கிழமை முதல் அடுத்த 24 மணிநேரத்துக்கு அமுலில் இருக்கும் என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. அதன்படி, பதுளை, கொழும்பு, காலி, கண்டி, களுத்துறை, கேகாலை, குருநாகல், மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# டெங்கு நோயினால் இந்த வருடத்தில் 22 மரணங்கள்!

2025 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் நேற்று (20) வரை நாடு முழுவதிலும் 40,633 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

இன்று (21) ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், கண்டறியப்பட்ட நோயாளர்களில் அதிகளவானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதிக ஆபத்துள்ள 11 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவை கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்கள் என்றும் அவர் கூறினார். இதனிடையே குறித்த காலப்பகுதியில் டெங்கு நோயினால் 22 மரணங்களும் பதிவாகியுள்ளன.

அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. எனவே, நுளம்புகள் இனப் பெருக்கம் செய்யும் இடங்களை முடிந்தவரை அழித்து சுற்றுப புறங்களை சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதாரத்துறை பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது. இரண்டு நாட்களுக்கு மேல்காய்ச்சல் நீடிக்குமாயின் வைத்தியர்களின் உரிய ஆலோசனையைபெறுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# செவ்வந்திக்கு உதவிய குற்றச்சாட்டில் கிளிநொச்சியில் 7 சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, ஒக். 21

பாதாள உலகக்கும்பலைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ என்பவரைக் கொலை செய்த பின்னர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வதற்கு இஷாரா செவ்வந்திக்கு உதவி செய்தனர் எனக் கூறப்படும் 7 சந்தேகநபர்கள் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் இன்று தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


மேலதிக விசாரணைகளுக்காக இஷாரா செவ்வந்தி தலைமறைவாக இருந்த கிளிநொச்சி பிரதேசத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# உலகின் 3வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா முன்னேறும் நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி கடிதம்

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக விரைவில் இந்தியா வளர்ச்சி பெறும் என பிரதமர் மோடி உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: தீபாவளி பண்டிகையின் புனிதமான தருணத்தில், உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அயோத்தியில் ராமர் கோவில் பிரமாண்டமாக கட்டப்பட்ட பிறகு இது இரண்டாவது தீபாவளி.

ராமர் நீதியை நிலைநாட்டவும், அநீதியை எதிர்த்துப் போராடவும் தைரியம் அளித்துள்ளார். இதற்கு ஒரு சின்ன உதாரணத்தை கடந்த மாதம் நாம் அனைவரும் பார்த்தோம். ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது இந்தியா நீதியை நிலைநாட்டியது. அதுமட்டுமின்றி, அநீதியைப் பழிவாங்கியது.




இந்த தீபாவளி குறிப்பாக சிறப்பு வாய்ந்தது, ஏனெனில், முதல் முறையாக, தொலைதூரப் பகுதிகள் உட்பட நாடு முழுவதும் பல மாவட்டங்களில் விளக்குகள் ஏற்றப்பட்டது. இந்த மாவட்டங்களில் நக்சலிசம் வேரோடு அழிக்கப்பட்டுள்ளது. சமீப காலங்களில், பலர் வன்முறையை கைவிட்டு சரணடைந்து வருகின்றனர்.

நமது நாட்டின் அரசியலமைப்பின் மீது நம்பிக்கையை வெளிப் படுத்துவதைக் கண்டிருக்கிறோம். இது தேசத்திற்கு ஒரு பெரிய சாதனை. இந்த வரலாற்று சாதனைகளுக்கு மத்தியில், சமீபத்திய நாட்களில் நாடு அடுத்த தலைமுறை சீர்திருத்தங்களிலும் இறங்கியுள்ளது. நவராத்திரியின் முதல் நாளில், ஜிஎஸ்டி வரிகள் குறைக்கப்பட்டது. இதனால், மக்கள் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை சேமித்து வருகின்றனர். பல நெருக்கடிகளைச் சந்திக்கும் உலகில், இந்திய பொருளாதாரம் சிறப்பாக உள்ளது. உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக விரைவில் இந்தியா மாறும்வளர்ச்சி அடைந்த இந்தியா மற்றும் தன்னம்பிக்கை கொண்ட நாடு என்ற பயணத்தில் வெற்றி பெறுவதற்கு குடிமக்களாகிய நமது முதன்மையான பொறுப்பு, தேசத்திற்கான நமது கடமைகளை நிறைவேற்றுவதாகும்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களை வாங்கி சுதேசி என்று நாம் பெருமையுடன் கூறுவோம்.'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற உணர்வை ஊக்குவிப்போம். அனைத்து மொழிகளையும் மதிப்போம். தூய்மையைப் பேணுவோம். நமது ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிப்போம். நமது உணவில் சமையல் எண்ணெய் பயன்பாட்டை 10மூ குறைத்து கொள்ள வேண்டும். யோகா பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இந்த முயற்சிகள் அனைத்தும் நம்மை வளர்ச்சி அடைந்த இந்தியாவை நோக்கிய நமது பயணத்தில் வெற்றியை உருவாக்கும்.

தீபாவளி தினத்தில், ஒரு விளக்கில் மற்றொரு விளக்கு ஏற்றும்போது, அதன் ஒளி குறையாது. மாறாக அது மேலும் வளரும் என்பதையும் நமக்குக் கற்பிக்கிறது. அதே மனப்பான்மையுடன், இந்த தீபாவளியன்று நமது சமூகத்திலும் சுற்றுப்புறத்திலும் நல்லிணக்கம், ஒத்துழைப்பு ஆகியவற்ற பேணுவோம். மீண்டும் ஒருமுறை, உங்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார். (ஐ)



# கல்வியில் சிறந்த அல்ல சீரழிந்த தமிழகம்: அன்புமணி குற்றச்சாட்டு

சென்னை கல்வியில் சிறந்த தமிழகம் அல்ல, கல்வியில் சீரழிந்த தமிழகம் என்று பாமக தலைவர் அன்புமணி குற்றம்சாட்டி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை

தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் மாணவர்களை சேர்ப்பதற்கான தமிழக அரசு விடுத்த அறிவிக்கை படுதோல்வி அடைந்துள்ளது. மத்திய அரசு நிதி ஒதுக்காததைக் காரணம் காட்டி நடப்பாண்டில் இந்த மாணவர் சேர்க்கையை நிறுத்தி வைத்திருந்த தமிழக அரசு, கடந்த 2ம் தேதி மாணவர் சேர்க்கை அறிவிக்கையை வெளியிட்டது.

இதுவரை பள்ளியில் சேராத மாணவர்களும், ஏற்கனவே கட்டணப் பிரிவில் சேர்ந்த மாணவர்களும் இதன்படி விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்திருந்தால் அது பொருத்தமாக இருந்திருக்கும்.

தற்போது நர்சரி பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட இடங்களை விட 20 ஆயிரம்பேர் கூடுதலாக சேர்ந்துள்ளனர். ஆனால், அவர்களுக்கான கட்டணத்தை அரசால் செலுத்த முடியாது. அதேநேரத்தில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் 18,600 இடங்களில் சேர மாணவர்கள் இல்லை.

அதனால் அந்த இடங்களுக்குரிய பணம் தமிழக அரசிடம் உபரியாக இருக்கும். எனினும், அதை கல்விப் பணிகளுக்கு பயன்படுத்த முடியாமல் மத்திய அரசுக்கு திருப்பி அனுப்ப வேண்டும். இதற்குத் தான் திமுக அரசு ஆசைப்பட்டதா?

திமுக அரசு அதன் தவறான கொள்கைகளால் தான் தமிழகத்தில் பள்ளிக்கல்வி, கல்லூரிக் கல்வி ஆகிய இரண்டையும் சீரழித்து வருகிறது. அந்த வகையில் இன்றைய தமிழகம், கல்வியில் சிறந்த அல்ல, மாறாக சீரழித்த தமிழகம்.

இவ்வாறு தமது அறிக்கையில் அன்புமணி குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அஜய் ரஸ்தோகியை சந்திக்கிறது விஜய் தரப்பு நடந்ததை விவரித்து ஆதாரங்களை அளிக்க முடிவு



கரூரில் 41 பேர் நெரிசலில் சிக்கி உயிரிழந்த விவகாரத்தில், தங்களிடம் இருக்கும் விபரங்களையும்ஆதாரங்களையும் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி அஜய் ரஸ்தோகியை சந்தித்து அளிக்க த.வெ.க., முடிவெடுத்துள்ளது.

கடந்த மாதம் 27ம் தேதி இரவில், நடிகர் விஜய் பிரசார கூட்டத்திற்கு வந்தோர் நெரிசலில் சிக்கி 41 பேர் இறந்து போன சம்பவத்தைத் தொடர்ந்து, நடிகர் விஜய், திருச்சி வழியாக சென்னைக்கு வந்தார். அதன்பின், அவர் கரூருக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை இன்று வரை சந்திக்கவில்லை. ஆனால், அவருடைய கட்சி நிர்வாகிகள் மட்டும் ஓரிருவர், பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறினர்.

இதற்கிடையில், செல்போன் வாயிலாக வீடியோ காலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிலரிடம், சென்னையில் இருந்தபடியே பேசினார் நடிகர் விஜய்.

தொடர்ந்து, நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு வழங்குவதாக அறிவித்த இழப்பீட்டுத் தொகையான தலா 20 லட்ச ரூபாய்க்கான தொகையை வங்கிக் கணக்கில் செலுத்தி இருக்கிறார் விஜய்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து நேரில் விஜய் ஆறுதல் கூற விரும்புகிறார். இதற்காக, போலீஸ் அனுமதி கேட்டு த.வெ.க.,வினர் தீவிரமாக முயன்று வருகின்றனர். கரூர் செல்ல திட்டமிடும் விஜய்க்கு பாதுகாப்பு கேட்டு, டி.ஜி.பி., அலுவலகத்தில் மனு அளித்தனர். ஆனால், மாவட்ட காவல் கண்காணிப்பாளரை அணுகி கடிதம் கொடுத்து, அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள் என டி.ஜி.பி., அலுவலகத்தில் சொல்லிவிட்டனர். இதையடுத்து, த.வெ.க.,வினர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை அணுகி கடிதம் கொடுத்து காத்துக் கொண்டுள்ளனர் ஆனால், உரிய அனுமதி அளிக்கப்படவில்லை.

இதனால், நடிகர் விஜய் கரூர் சென்று, பாதிக்கப்பட்ட குடும்பங்களை சந்திக்கும் நிகழ்வு தள்ளிக் கொண்டே போகிறது. (ஐ)

# நடிகர் விஜய் ஆட்சி மாற்றத்துக்கு வித்திட வேண்டும் கஸ்துாரி

"நடிகர் விஜய், தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான இலக்கை நோக்கித்தான் பயணிக்க வேண்டும்," என, தமிழக பா.ஜ., பிரமுகர் நடிகை கஸ்துாரி கூறினார்.

கரூரில் நடிகர் விஜய் சென்ற பிரசாரக் கூட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் இறந்து போனது துரதிருஷ்டவசமானது. அப்படியொரு நிகழ்வு நடந்திருக்கக்கூடாது. சம்பவம் நடந்த பின்பும், கரூர் மக்களும், நெரிசலில் சிக்கி பாதிப்படைந்தோர் குடும்பத்தினரும், விஜய் பக்கம் இருப்பதாக கூறுகின்றனர். ஆனால், அவரோடு இருக்க வேண்டிய, த.வெ.க., நிர்வாகிகள், அப்படி இல்லை.

கரூர் மக்களுக்கு நம்பிக்கைக்குரியவராக, நடிகர் விஜய் தொடர்ந்து இருக்க வேண்டும்.


நடிகர் விஜய் தலைமையில் தமிழகத்தில் ஒரு கூட்டணியை கட்டமைக்க முயல்கின்றனர். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் அது நடக்க வாய்ப்பில்லை.

அதனால், தன் தலைமையில் கூட்டணி அமைக்கும் முயற்சியை விட்டு விட்டு, இருக்கும் கூட்டணியில் தன்னை இனைத்துக் கொள்ள வேண்டும்.



ஆந்திராவில் அப்படித்தான் செய்தார் துணை முதல்வரான பவன் கல்யாண் அதே பாணியில் விஜயும் செயல்பட வேண்டும். இப்போதைக்கு அவர் முன்னாள் இருக்கும் ஒரே சவால் - ஆட்சி மாற்றத்துக்கு வித்திட வேண்டும் என்பதுதான். அதை நோக்கிய பயணத்தைத்தான் அவர் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# இருவர் ஒன்றானால்



–நாராயணி சுப்ரமணியன்

எந்திரன் திரைப்படத்தில் 'உயிர் என்றால் என்ன?' என்ற சிட்டியின் சாதாரணக் கேள்விக்கு வசீகரன் பதில் சொல்லத்திணறுவதைப்பார்த்திருப்போம். உயிருள்ளவைஃ உயிரற்றவை என்று தன்னுணர்வாக மனிதர்களால் பிரிக்க முடிகிறது என்றாலும் 'உயிர்' என்பதற்கான வரையறையை முன்வைக்க முடிவதில்லை என்பதே உண்மை. வேற்று உலக ஜீவராசிகளைத் தேடி மனிதன் பயணிக்கத் தொடங்கிய பின்னர் இந்த வரையறையின் முக்கியத்துவமும் அதை நிறுவுவதில் உள்ள சிக்கலும் கூடிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

எப்படியாயினும்'அடுத்த தலைமுறையை உருவாக்குதல்' என்பது உயிர்களுக்கே உள்ள தனிப்பண்பாகப் பார்க்கப்படுகிறது. ஒரு பேனாவிலிருந்து இன்னொரு பேனா பிறப்பதில்லை. ஆனால், சாதகமான சூழல் அமையும்போது ஓர் அமீபா தன்னைத் தானே பிரதியெடுத்துக்கொள்கிறது. ஆண் ஒட்டகமும் பெண் ஒட்டகமும் இணைசேர்ந்து குட்டிகளைப் பெற்றெடுக்கின்றன. அடுத்த செடிக்கான ஆரம்பகட்ட செல்களை ஏந்தியபடி பூக்கள் பூக்கின்றன.

இனப்பெருக்கம் என்ற பண்பு எல்லா உயிர்களுக்கும் பொதுவானது என்றாலும் உலகில் கணக்கிலடங்கா இனப்பெருக்க முறைகள் உண்டு. இரண்டு செல்களாகப் பிரியும் எளிய முறை தொடங்கி, வெவ்வேறு மரபணுக் கூறுகள்கொண்ட விலங்குகளோடு இணைசேரும்உயிரிகள் வரை அந்தக் களத்தில் பல ஆச்சரியங்கள் உண்டு. முதல் செல் தன்னைப் பிரதியெடுத்துக்கொண்டபோது பூமியில் ஒரு பாய்ச்சல் நிகழ்ந்தது என்றால், பால்சார் இனப்பெருக்கம் (ளுநஒரயட சுநிசழனரஉவழை) என்ற அம்சத்தின் வருகை உயிரியல் உலகின் மற்றொரு மைல்கல் எனலாம்.

காதலோ கலவியோ, அதை அடையும் பாதை மலர் நிறைந்ததாக மட்டுமே இருக்காது என்பது மனிதர்களுக்குத் தெரிந்ததுதான். அடுத்த தலைமுறையை உருவாக்க வேண்டுமானால் இரு செல்கள் சேர வேண்டும் என்ற கட்டாயம் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கிறது என்று கூறும் அறிவியலாளர்கள், பால்சார் இனப்பெருக்கத்தால் ஏற்படும் பாதிப்புகளைப் பட்டியலிடுகிறார்கள்:

பால்சார் இனப்பெருக்கம் வேண்டுமானால் செல்பிரிதல் முறை மாற வேண்டும். அதற்கு ஒரு பரிணாமப் பாய்ச்சல் தேவைப்படும்.

ஒருவேளை பரிணாம வளர்ச்சியில் பால்சார் இனப்பெருக்கம் வந்துவிட்டால், அடுத்தது இனப்பெருக்கத்துக்கான தனி செல்களை உருவாக்க வேண்டியிருக்கும். ஆணின் உயிரணுக்கள், பெண்ணின்கருமுட்டை இரண்டையும்உருவாக்க அதிக ஆற்றல் தேவைப்படும்.

ஒவ்வொரு முறையும் இணைசேருவதற்கு இன்னொரு உயிரியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும். நீரில் நீந்தியபடி நினைத்த போதெல்லாம் இரண்டாகப் பிரிந்து அடுத்த தலைமுறையை உருவாக்கும் கதை இனி நடக்காது.

அடுத்ததாக இணையைத் தேர்ந்தெடுக்கும் ஒரு படலம் தொடங்குகிறது. இணையைக் கவர்வதற்காக ஒவ்வொரு விலங்கும் தனித்தனிப் பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவை சில நேரங்களில் வேட்டையாடிகளிடமிருந்து தப்பிப் பிழைப்பதற்கே தடையாக இருக்கலாம். இதற்கு மிகச்சிறந்த உதாரணம் ஆண் மயிலின் நீண்ட, கனமான தோகை. தவிர, இணைகவர்வதற்கு இதுபோன்ற பண்புகளை உருவாக்கக் கூடுதல் ஆற்றலும் மரபணு மாற்றங்களும் தேவைப்படும்.

இணையை ஒருவழியாகக் கவர்ந்த பிறகு இரு உயிரிகளும் இணைசேர்கின்றன. இந்த நேரத்தில் வேட்டையாடிகளின் தாக்குதல் இருக்கலாம், பாலியல் நோய்கள் பரவுவதற்கும் இது வழிவகுக்கும்.

இத்தனை ஆபத்துகளோடு இணைசேர்ந்த பிறகு, தன் மரபணுக்களில் 50மூ மட்டுமே அடுத்த தலைமுறைக்குப் போகும். ஆனால், கலவியற்ற இனப்பெருக்கத்திலோ 100மூ தன்னுடைய மரபணுக்கள் மட்டுமே இருக்கும் ஓர் உயிரை உருவாக்க முடியும்.

பால்சார் இனப்பெருக்கத்தில் முட்டையை உருவாக்கவும் குட்டிகளைப் பெற்றெடுக்கவும் பெண் உயிரிகளே அதிக ஆற்றலையும் நேரத்தையும் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆண் விலங்குகளுக்கோ மரபணு தொடர்ச்சி சார்ந்த சில சிக்கல்கள் எழுகின்றன. ஆகவே இருசாராருக்கும் இந்த வகை இனப்பெருக்கத்தில் இழப்புகள் உண்டு.

ஒருசெல் உயிரிகள் இரண்டாகப் பிரியும் தன்மை கொண்டவை. அவை இறப்பதில்லை. முடிவற்ற பிரிதல்கள்மூலம் அவை தங்கள் வாழ்வை நீட்டிக்கொண்டே போகின்றன. இன்னும் சொல்லப்போனால் ஒருசெல் உயிரிகள் மரணமற்ற பெருவாழ்வு வாழ்கின்றன எனலாம். ஆனால், பால்சார் இனப்பெருக்கம் அப்படியல்ல. அறிவியல் ரீதியாக இது ஒரு பாதகமா இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், மனித மனத்திற்கு இந்தச் செய்தி ஒரு சின்ன பெருமூச்சைத் தருகிறது என்பதே உண்மை.

இத்தனை பாதகங்கள் இருக்கிற பால்சார் இனப்பெருக்கம், நியாயமாகப் பார்த்தால் எப்போதோ வழக்கொழிந்து போயிருக்கவேண்டும். ஆனால், 99மூ பாலூட்டிகளின் இனப்பெருக்க முறை இதுதான். தாவரங்களில் 1மூ மட்டுமே பெரும்பாலும் கலவியற்ற முறையில் இனப்பெருக்கம் செய்கின்றன. விலங்குகளில் ஆயிரத்தில் ஓர் இனம் மட்டுமே பாலற்றதாக இருக்கிறது. பூக்கும் தாவரங்களில் பாலற்ற இனப்பெருக்கம் 300 முறை மீண்டும் மீண்டும் தோன்றினாலும் அந்த இனங்கள் பரிணாம ரீதியில் அடுத்த கட்டத்துக்குப் போகாமல் அறுந்துவிட்டது என்கிறார்கள் தாவரவியலாளர்கள். பறவைகள், பட்டாம்பூச்சிகள், மீன்கள் என நாம் அறிந்த உயிரினங்களைத் தவிர, பல ஒரு செல் உயிரிகளிலும் பால்சார் இனப்பெருக்கப் பண்பு உண்டு. ஒருவகையான ஒருசெல் பூஞ்சையில், மரபணுக்களைக் கலக்கும் இனப்பெருக்க முறை நிகழ்கிறது. ப்ளாஸ்மிட் எனப்படும் மரபணுக்களை பாக்டீரியாக்கள் ஒன்றோடொன்று கலந்து இனப்பெருக்கம் செய்கின்றன. காலத்தின் கடிகாரத்தைச் சற்றே பின்னோக்கிப் பார்த்தால் பால்சார் இனப்பெருக்கப் பண்பு உருவாகி 2 பில்லியன் ஆண்டுகளாக நிலைத்து நிற்கிறது!



### இதற்கு என்ன காரணம்?

டார்வின் தொடங்கி இன்றைய உயிரியலாளர்கள் அனைவரும் கேட்கும் கேள்வி இது. 2021இல் மரபணுத் தொழில்நுட்பம் உச்சத்தில் இருக்கும் இந்த நூற்றாண்டிலும்கூட விஞ்ஞானிகளால் தரமுடிகிற பதில் இதுதான்

"பால் சார் இனப்பெருக்கம் ஏன் இன்னும் நிலைத்து நிற்கிறது என்பதற்கு ஒருமித்த காரணம் ஒன்றைக் கூறிவிட முடியாது. சில கருதுகோள்கள் இருக்கின்றன."

ஒன்றல்ல இரண்டல்ல, இதுவரை 20 கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில காரணங்களைப் பார்க்கலாம்.

வால்வாக்ஸ் (Volvox), பரமீசியம்(யசயஅநஉரைஅ) போன்ற ஒருசெல் உயிரிகள், பொதுவாகக் கலவியற்ற இனப்பெருக்கம் மேற்கொள்ளும் பண்பு உடையவை. ஆனால், ஆய்வகத்தில் மோசமான சூழ்நிலையில் இவை வைக்கப்படும்போது திடீரென்று இவை பால்சார் இனப்பெருக்க முறையில் மரபணுக்களைக் கலந்து இனப்பெருக்கம் செய்கின்றன. சுற்றியுள்ள சூழல் ஆபத்தானதாக மாறும்போது, மரபணு வலிமையை அதிகரித்துக்கொள்ள அவை இந்த முறையைக் கையாள்வதாக அறிவியலாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே ஆதி உலகில் சூழ்நிலை மாறும்போது, தங்களைக் காத்துக்கொள்ள விலங்குகள் இந்த முறைக்குத் தாவியிருக்கலாம்.

சரிஅப்போதைய பூமியோடு ஒப்பிடும்போது இன்றைய உலகம் சீராகத்தானே இருக்கிறது? இன்னமும் ஏன் பால்சார் இனப்பெருக்கமே தொடர்கிறது?

அதற்கு சுநன ஞரநநெ உலிழவாநளளை ஒரு காரணமாக சொல்லப்படுகிறது. அற்புத உலகிற்குள் நுழையும் ஆலிஸ் என்ற சிறுமியின் கதையை நாம் அனைவரும் கேள்விப்பட்டிருப்போம். அதில் வரும் சிவப்பு ராணி என்ற கதாபாத்திரம், "நீ இருக்கும் இடத்திலேயே நிலைத்து நிற்க வேண்டுமானால் தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருக்க வேண்டும்" என்பாள். சூழ்நிலை மாறியபோது பால்சார் இனப்பெருக்கத்தை மேற்கொண்ட விலங்குகள், கிடைத்த வலுவைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமானால் அதையே தொடர வேண்டும் என்பதையே இந்தக் கருதுகோள் தெரிவிக்கிறது.

சில விஞ்ஞானிகளோ, சூழ்நிலை நாம் நினைக்கும் அளவுக்குச் சீராக இல்லை என்று நினைவுபடுத்துகிறார்கள். இந்த உலகம் ஒட்டுண்ணிகள் நிறைந்தது. அவை உயிருக்கு ஆபத்தான நோய்களைத் தருகின்றன. ஒட்டுண்ணிகளோடு நாம் ஒவ்வொரு நொடியும் போட்டி போட்டபடியே இருக்கிறோம். ஆகவே அதற்கான வலுவை அதிகப்படுத்திக்கொள்ள நம் மரபணுக்கள் கலப்பது அவசியம் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். கலவியற்ற முறையில் இனப்பெருக்கம் செய்யும் உருளைக்கிழங்கில் ப்ளைட் நோய் தாக்கியதில் எல்லாப் பயிர்களும் அழிந்து (7ஆம் பக்கம் பார்க்க..)

# ஓட்டெடுப்பில் வெற்றி ஜப்பான் வரலாற்றில் முதல் பெண் பிரதமராகும் சனேனே டகாய்ச்சி




ஜப்பான் பார்லிமெண்ட்டில் கீழவையில் நடைபெற்ற ஓட்டெடுப்பில் சனேனே டகாய்ச்சி வெற்றி பெற்றுள்ளார். இதன்மூலம் அவர் ஜப்பானின் முதல் பெண் பிரதமர் ஆகிறார்.

ஜப்பானில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மை இழந்ததை அடுத்து, பிரதமர் ஷிகெரு இஷிபா தமது பதவியை அண்மையில் ராஜினாமா செய்தார். அதன் பின்னர், அக்கட்சியின் புதிய தலைவராக அமைச்சர் சனே டகாய்ச்சி (64) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வெற்றியைத் தொடர்ந்து லிபரல் ஜனநாயகக் கட்சியின் அதிகாரப்பூர்வ தலைவராக பதவி ஏற்றுக் கொண்டார். இதையடுத்து, அவர் பிரதமராக தேர்வு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன்படியே சனே டகாய்ச்சி பிரதமர் ஆக தேர்வு செய்யப்பட்டார்.

இந் நிலையில், ஜப்பான் பார்லிமெண்ட்டில் ஓட்டெடுப்பு நடைபெற்றது. கீழவையில் நடைபெற்ற மொத்தம் உள்ள 465 ஓட்டுக்களில் 237 ஓட்டுகளைப் பெற்று டகாய்ச்சி வெற்றி பெற்றார்.

இதையடுத்து, அவர் மேலவையில் நடத்தப்படும் ஓட்டெடுப்பிலும் வெற்றி பெறும் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளதால் ஜப்பானின் புதிய பிரதமராக ஏற்றுக் கொள்ளப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விரைவில் ஜப்பான் நாட்டின் 104வது பிரதமராக அவர் பதவி ஏற்க இருக்கிறார்.

இதன் மூலம் ஜப்பான் அரசியல் வரலாற்றில் பதவியேற்க உள்ள முதல் பெண் பிரதமர் என்ற பெயரையும், பெருமையையும் சனே டகாய்ச்சி பெறுகிறார். ஜப்பானின் இரும்பு பெண்மணி என்று அழைக்கப்படும் டகாய்ச்சி, மறைந்த பிரிட்டிஷ் பிரதமர் மார்கெரட் தாட்சரை தமது ரோல் மாடலாக கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டிரம்பின் ஆசை நிறைவேறுகிறது ரூ.2,200 கோடியில் பால்ரூம் கட்ட வெள்ளை மாளிகை இடிக்கும் பணிகள் தொடக்கம்




வாஷிங்டன் அதிபர் டிரம்பின் நீண்ட நாள் ஆசையான அமெரிக்க வெள்ளை மாளிகையின் ஒரு பகுதியை இடிக்கும் பகுதிகள் தொடங்கி உள்ளன. இங்கு ரூ.2200 கோடியில் பால்ரூம் அமைக்கப்படுகிறது.

அமெரிக்காவின் அடையாளமாகவும், அந்நாட்டு அதிபர்களின் வரலாற்று சிறப்புமிக்க இல்லமாக வெள்ளை மாளிகை உள்ளது. இந்த மாளிகையின் கிழக்கு பகுதி கட்டடம் 1902ம் ஆண்டு கட்டப்பட்டது. இறுதியாக 1942ம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது.

அதிபராக பதவியேற்ற பின்னர், வெள்ளை மாளிகையின் ஒருபகுதி இடிக்கப்பட்டு பால் ரூம் அமைக்கப்படும் என்று டிரம்ப் அறிவித்து இருந்தார். இது அவரின் கனவு என்பதோடு நீண்ட நாள் விருப்பம் ஆகும். அவரின் ஆசையை பூர்த்தியாக்கும் விதத்தில அதற்கான கட்டுமான பணிகள் தற்போது தொடங்கி உள்ளன.

இந்த விபரத்தை அதிபர் டிரம்ப் தமது ட்ரூத் சோஷியல் பதிவில் வெளியிட்டு உள்ளார். அந்த பதிவில் அவர் கூறி இருப்பதாவது

அமெரிக்க வெள்ளை மாளிகையின் வளாகத்தில் புதிய. பெரிய மற்றும் அழகான பால்ரூம் கட்டும் பணிகளுக்காக பள்ளம் தோண்டப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளை மாளிகையின் கிழக்கு பகுதி முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மிக அழகாக, முழுமையாக நவீனமயமாக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் ஒவ்வொரு அதிபரும், வெள்ளை மாளிகை வளாகத்தில் மிக பிரமாண்ட விருந்துகள், கலைநிகழ்ச்சிகளுக்காக மக்களை தங்க வைக்க ஒரு பால்ரூம் வேண்டும் என்று 150 ஆண்டுகளுக்கும் மேலாக கனவு கண்டு வந்தனர். வரி செலுத்துவோருக்கு எந்த சிரமும் இன்றி, இந்த கனவை செயல்படுத்திய முதல் அதிபர் நான் என பெருமைப்படுகிறேன். இந்த பால்ரூம் வரும் காலக்கட்டங்களில் பயன்படுத்தப்படும். இவ்வாறு தமது ட்ரூத் சோஷியல் பதிவில் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளை மாளிகையில் இடிக்கப்படும் பகுதியில் புதியதாக ரூ. 2.200 கோடியில் அமைக்கப்படும் இந்த பால்ரூமில், சர்வதேச நாடுகளின் தலைவர்கள், அவர்கள் உடனான அரசியல் சந்திப்புகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். (ஐ)



# பேச்சுவார்த்தை நடத்துவதற்கான டிரம்பின் விருப்பத்தை நிராகரித்தார் ஈரான் தலைவர் கமேனி

பேச்சுவார்த்தை நடத்துவதற்கான அமெரிக்க அதிபர் டிரம்பின் விருப்பத்தை ஈரானின் தலைவர் அயதுல்லா அலி கமேனி நிராகரித்தார். மேலும், அவர் அமெரிக்கா ஈரானின் அணுசக்தி திறன்களை அழித்துவிட்டதாக டிரம்ப் கூறியதை மறுத்தார்.

ஈரான்- அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் அணு ஆயுதத் திட்டம் குறித்த மறைமுக பேச்சுவார்த்தை ஐந்து சுற்றுகளாக நடைபெற்றது. கடந்த ஜூன் மாதம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகியவை ஈரானின் அணு ஆயுத தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. பிறகு அணு ஆயுத ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை தடைபட்டது. கடந்த வாரம், காசாவில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர்நிறுத்தம் தொடங்கியது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ள காரணமாக இருந்த டிரம்புக்கு, இஸ்ரேல் பார்லிமென்டில் பாராட்டு விழா நடந்தது. இந்த விழாவில் பங்கேற்று அதிபர் டிரம்ப் பேசுகையில், 'ஈரானுடன் அமெரிக்கா அமைதி ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்த முடிந்தால், அது நன்றாக இருக்கும்' என தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் டிரம்பின் புதிய பேச்சுவார்த்தை நடத்த விருப்பத்தை ஈரானின் தலைவர் அயதுல்லா அலி கமேனி நிராகரித்தார். மேலும், அவர் அமெரிக்கா ஈரானின் அணுசக்தி திறன்களை அழித்துவிட்டதாக டிரம்ப் கூறியதை மறுத்தார்.

இது குறித்து அவர் பேசியதாவது: டிரம்ப் தன்னை ஒரு டீல் மேக்கர் என சொல்கிறார். ஆனால் ஒரு ஒப்பந்தம் வற்புறுத்தலுடன் சேர்ந்து அதன் விளைவு முன்னரே தீர்மானிக்கப் பட்டால், அது ஒரு ஒப்பந்தம் அல்ல, மாறாக ஒரு திணிப்பு மற்றும் மிரட்டல்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் பெருமையுடன் அவர்கள் ஈரானின் அணுசக்தித் மையங்களை குண்டுவீசி அழித்ததாகக் கூறுகிறார். சரி, கனவு காணுங்கள். ஈரானுக்கு அணுசக்தி வசதிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அமெரிக்காவிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? இந்தத் தலையீடுகள் பொருத்தமற்றவை. இவ்வாறு ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி கூறினார். (ஐ)

# முடங்கியது 'அமேசான் வெப் சர்வீசஸ்' பிரபல டிஜிட்டல் தளங்கள் தவிப்பு

அமேசான் வெப் சர்வீசஸ்' சேவையில் பழுது ஏற்பட்டதால், 'ஸ்னாப்சாட், பெர்ப்ளெக்சிட்டி ஏ.ஐ.,' உட்பட பல்வேறு செயலிகள், தளங்கள் முடங்கின. இதன் காரணமாக உலகம் முழுதும் உள்ள பயனர்கள் கடும் அவதிக்கு உள்ளாகினர்.

அமெரிக்காவை தலைமையிடமாக வைத்து செயல்படும், 'அமேசான்' நிறுவனத்தின் துணை நிறுவனமான, 'அமேசான் வெப் சர்வீசஸ்' சேவையை பயன்படுத்தி, பிரபல ஏ.ஐ., தளமான 'பெர்ப்ளெக்சிட்டி, ஸ்னாப்சாட், போர்ட்னைட்' போன்ற பிரபல செயலிகள் உட்பட பல்வேறு, 'டிஜிட்டல்' தளங்கள் இயங்கி வருகின்றன .

இந்த நிறுவனம், 'கிளவுட் கம்ப்யூட்டிங்' தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இயங்கி வருகிறது.

இந்நிலையில், 'அமேசான் வெப் சர்வீசஸ்' நிறுவனத்தின் சேவையில் நேற்று தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டது.

இதன் காரணமாக, 'அமேசான் டாட் காம், பிரைம் வீடியோ, அலெக்சா, ராப்லாக்ஸ், ராபின்ஹூட், ஸ்னாப்சாட், பெர்ப்ளெக்சிட்டி ஏ.ஐ., வென்மோ, கான்வாஸ், சிக்னல், டூலிங்கோ, குட்ரீட்ஸ், ரிங், தி நியூயார்க் டைம்ஸ், லைப்360, போர்ட்னைட், ஆப்பிள் டிவி, வெரிசான், பப்ஜி' உள்ளிட்ட பல செயலிகளின் சே வைகள் பாதிக்கப்பட்டன.

'அமேசான் வெப் சர்வீசஸை' நம்பி தான் பல பெரும் நிறுவனங்கள் இயங்கும் நிலையில், இந்த தொழில்நுட்ப கோளாறு உலக அளவில் பல நிறுவனங்களின் இணைப்பை பாதித்தது. இது தொடர்பாக சமூக வலைதளத்தில், 'அமேசான்' நிறுவனம் வெளியிட்ட தகவலில், தொழில்நுட்ப கோளாறில் ஏற்பட்ட பெரும்பாலான பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக தெரிவித்தது. கடந்த ஆண்டு 'கிரவுட் ஸ்ட்ரைக்' பாதிப்புக்கு பின் பெரிய இணைய பாதிப்பாக இது பார்க்கப்படுகிறது. (ஐ)

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வில் வைத்தியசாலை சமூகத்தினர் மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது உயிரிழந்தவர்களின் உருவப்படங்களுக்கு நினைவுச் சுடர் ஏற்றப்பட்டதுடன், மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

1987ஆம் ஆண்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரின் தாக்குதலில் வைத்தியசாலைப் பணியாளர்கள் 21 பேர் உள்ளிட்ட 68 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் பலர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய நினைவேந்தல் நிகழ்வில் 1987ஆம் ஆண்டு உயிர்நீத்த சாரதி வை.சண்முகலிங்கத்தின் நினைவாக அவரது மனைவி, சக்கர நாற்காலி ஒன்றை நன்கொடையாக வழங்கினார்.

## யாழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள 021 222 2221 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பெடுத்துப் பொதுமக்கள் முறையிடுவதன் மூலம் பொலிஸார் அந்தப் பகுதிக்கு விரைந்து வந்து பிரச்சினைகளைத் தீர்ப்பர் என்று பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள எந்தப் பகுதியில் இருந்தும் குறித்த இலக்கத்துக்கு அழைப்பெடுத்து முறையிட்டால் அந்தந்தப் பகுதி பொலிஸ் நிலையங்கள் ஊடாக பொது இடங்கள் மற்றும் போக்குவரத்துக்களின் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக உடனடித் தீர்வைப் பெற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கசிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

90 லீற்றர் கோடா, சாராயம் மற்றும் போதைப்பொருட்கள் என்பவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச் சாட்டுக்களின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி 29 பேரும் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், பொலிஸாரின் விசேட நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹுங்கம, கலமெட்டிய பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 18 ஆம் திகதி இரவு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த போது முதலை இழுத்துச் சென்றுள்ள நிலையில் இரண்டு நாட்கள் கழித்து நேற்று திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் முதலைகள் இழுத்துச் செல்லப்பட்டு மீனவர்கள் பலர் உயிரிழந்துள்ளனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு பகுதிகளில் பிடிக்கப்படும் முதலைகளை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் கலமெட்டிய கடற்கரை பகுதியில் விட்டுச் செல்கின்றனர் என்றும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## கன மழை தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள எச்சரிக்கை!

தற்போது பெய்துவருகின்ற கன மழை தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது. அதன்படி மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மற்றும் வடக்கு மாகாணங்கள் மற்றும் அனுராதபுரம் மாவட்டத்திற்கு இந்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விடுக்கப்பட்டுள்ள இந்த எச்சரிக்கை இன்று (21) காலை 9 மணி முதல் அடுத்த 24 மணி நேரத்திற்கு அமுலில் இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் கிழக்கே உள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட குழப்பம் தற்போது குறைந்த அழுத்தப் பகுதியாக உருவாகியுள்ளது.

இது தொடர்ந்தும் வலுவடைந்து இலங்கைக்கு அருகில் வடமேற்கு நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் தாக்கம் காரணமாக மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மற்றும் வட மாகாணங்கள் மற்றும் அநுராதபுரம் மாவட்டத்தில் சில இடங்களில் 150 மி.மீ.க்கு மேல் பலத்த மழை பெய்யும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மேலும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்கால அறிவிப்புகளில் கவனம் செலுத்துமாறும் அந்த திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

# தென் கொரிய பிரதி சபாநாயகரை சந்தித்தார் நாமல்



தென் கொரியாவிற்கு தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து ஒரு சுமுகமான கலந்துரையாடலுக்காக கொரிய தேசிய சட்டமன்றத்தின் துணை சபாநாயகர் ஜு ஹோ-யங்கை சந்தித்தார்.

இலங்கையின் மரியாதைக்குரிய புத்த துறவியும் நீண்டகால நண்பருமான வண. யியோங்-டாம் லிமின் அழைப்பின் பேரில் ராஜபக்ஷ வின் வருகை அமைந்துள்ளது.

தனது விஜயத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர் புச்சியோனில் உள்ள சியோக்வாங்சா விஹாரைக்கும் சென்றார், அங்கு இலங்கையுடன் நீண்டகால மத மற்றும் கலாச்சார உறவுகளைப் பேணி வரும் வண. யியோங்-டாம் லிமிடம் ஆசிகளைப் பெற்றார். (ஐ)

# அடுத்த வருடம் தேர்தல் நடக்கும்

## அரசு உறுதிபடத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் நடத்த வேண்டும் என்ற முடிவில் அமைச்சரவையும் உறுதியாக உள்ளது என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

எனினும், எந்த முறைமையில் தேர்தல் நடத்தப்படும் என்பது பற்றி முடிவெடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். அதேவேளை, புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனத் தேசிய மக்கள் சக்தியால் வழங்கப்பட்ட உறுதிமொழியும் நிறைவேற்றப்படும் என்றும், அதற்கான கால எல்லையைச் சரியாகக் குறிப்பிட முடியாது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# பல அமைச்சுகளின் விடயதானங்களில் திருத்தம்

பல அமைச்சகங்களின் நோக்கெல்லைகள், செயல்பாடுகள், துறைகள், சட்டரீதியான அமைப்புகள் மற்றும் கூட்டுத்தாபனங்களை திருத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வெளியிட்டுள்ளார்.

அண்மைய அமைச்சரவை மறுசீரமைப்பிற்கு ஏற்ப நோக்கெல்லைகள் திருத்தப்பட்டுள்ளன.

அதன்படி, பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த சிவில் பாதுகாப்புத் துறையும், நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் கீழ் இருந்த புனர்வாழ்வு பணியகமும், பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளன.

மேலும், சுகாதார அமைச்சின் கீழ் இருந்த இலங்கை திரிபோஷா கார்ப்பரேஷன் லிமிடெட், வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சகத்திற்கும், புத்த சாசனம், மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் கீழ் இருந்த சலசின் மீடியா சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சகத்திற்கும் மாற்றப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் அமைச்சின் கீழ் இருந்த புவியியல், நில அளவை மற்றும் சுரங்கப் பணியகம், தொழில்துறை தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் விவசாயம், கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இருந்த இலவங்கப்பட்டை மேம்பாட்டுத் துறை, பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கிடையில், எரிசக்தி அமைச்சின் கீழ் இருந்த இலங்கை மின்சார சபை வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார சபை தனியார் நிறுவனம்

என மறுபெயரிடப்பட்டுள்ளது. மேலும் மின்சார சபை மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட 4 புதிய நிறுவனங்களும் இந்தப் புதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

சமீபத்திய அமைச்சரவை மறுசீரமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட அமைச்சகங்களின் நோக்கங்களும் இந்தப் புதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. (ஐ)

# இருவர் ஒன்றானால்...

1845இல் அயர்லாந்தில் நாடு தழுவிய பஞ்சம் ஏற்பட்டது. உலக வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளில் இதுவும் ஒன்று. ஒருவேளை உருளைக்கிழங்குகள் பால்சார் இனப்பெருக்கப் பண்பு கொண்டவையாக இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்க வாய்ப்பு குறைவுதான்.

மரபணுக்களில் பிழைகள் நடப்பது சகஜம். சில மரபணு மாறுபாடுகள் ஆபத்தானவையாகவும் இருக்கின்றன. பிழைகளைத் திருத்தி, ஆபத்தான மரபணு மாறுபாடுகளை விலக்குவதில் பால்சார் இனப்பெருக்கம் முக்கியப் பண்பு வகிக்கிறது. ஆகவே இந்தப் பண்பு கொண்ட உயிரிகளின் மரபணு வலுவானதாக இருக்கிறது.

இனப்பெருக்கத்தின் முக்கிய நிகழ்வான இணைசேருதல் நிகழ்வு வேறு சில பயன்களையும் அளிக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பழ ஈக்களில் (குசுரவை குடல), இணைசேர்தல் நிகழ்வுக்குப் பின்னர் பெண் ஈக்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. அதனால் அவற்றின் ஆயுட்காலம் நீள்கிறது. இனப்பெருக்கத்தின்போது உருவாகும் ப்ராஸ்டாக்ளாண்டின் என்ற வேதிப்பொருள் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. 2018இல் நடந்த ஓர் ஆய்வில், இணைசேர்தல் நிகழ்வு ஆண் எலிகளின் மூளைத்திறனை அதிகப்படுத்தும் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மனிதன் மற்றும் சில பாலூட்டிகளைத் தவிர, இணைசேர்தல் நிகழ்வால் விலங்குகள் மகிழ்ச்சியடைகின்றனவா என்று தெரியாத நிலையில், இதுபோன்ற ஆய்வுகள் முக்கியமானவை.

இணைசேர்தலால் ஏற்படும் துளியூண்டு நோய் எதிர்ப்பு சக்திக்காக மட்டுமே பால்சார் இனப்பெருக்கம் நிலைத்திருக்கிறதா என்று நமக்குத் தோன்றலாம். ஆனால், பரிணாமத்தைப் பொறுத்தவரை ஓர் அம்சம் நன்மை பயக்கிறது என்றால் அது எப்படியாவது நிலைநிறுத்தப்படும் என்பதையே அறிவியல் சொல்கிறது.

மேலே சொல்லப்பட்ட கருதுகோள்கள் எல்லாமே கூட்டுக் காரணிகளாகவும் இயங்கலாம் என்று சில விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். இயற்கை நம் புரிதலுக்கு அப்பாற்பட்ட பல நுணுக்கங்கள் நிறைந்தது என்பதால் ஒரு காரணியை மட்டும் இழையாகப் பின்பற்றி இயற்கையை விளக்கிவிட முடியாது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இன்னொரு சாராரோ, என்னதான் தொழில்நுட்பம் வளர்ந்தாலும் நம் மனித மனம் குறுகலானது என்பதால், பால்சார் இனப்பெருக்கம் சார்ந்த நமது ஆராய்ச்சிகள் எல்லாமே ஆரம்பகட்டத்தில் இருப்பதாகத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். "இனப்பெருக்க முறைகளைப் பொறுத்தவரை, எதை ஆராய வேண்டும் என்பதை நமது மரபுசார் மதிப்பீடுகளே தேர்ந்தெடுக்கின்றன" என்கிறார் அறிவியலாளர் ஏமி வொர்த்திங்டன். அவரது கூற்றுப்படி பார்த்தால் விஞ்ஞானிகளின் பார்வை விரிந்தால் மட்டுமே பால்சார் இனப்பெருக்கத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக விஞ்ஞானிகளைப் போட்டுக் குழப்பியடிக்கும் இன்னொரு கேள்வியும் இருக்கிறது. செல்கள் கலந்தால்தான் உயிர்கள் உருவாகும் என்றான பின்பு, ஏன் இரண்டு செல்களின் கலப்பு என்ற கட்டாயம் ஏற்பட்டது? ஒரு செல் பிரியும்போது மரபணுப் பிழை வரலாம், இரு செல் சேரும்போது வலு அதிகரிக்கும் என்றால், மூன்று செல்கள் சேர்ந்தால் கூடுதல் வலு கிடைக்குமே? இணைசேர இரு உயிரிகளைத் தேடுவது நடைமுறையில் வேலைப்பளுவை அதிகரிக்கும் என்றாலும் அதற்கான பயன்கள் அதிகம்தானே?

இதற்கு ஒரு சில ஆரம்பகட்ட பதில்கள் கிடைத்திருக்கின்றன என்றாலும் விஞ்ஞானிகளின் தேடல் தொடர்கிறது. பதில் தேடுவது ஒருபுறம் என்றால், இரண்டு செல்களுக்கு மேல் கலந்தால் மட்டுமே உயிர் உருவாகும் என்ற நிலை இருந்தால் இந்த உலகம் எப்படி இருக்கும் என்ற எண்ணமே சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கற்பனைப் பிரபஞ்சத்தை வுாந புழளள வுாநஅளநடஎநள என்ற நூலில் படைத்திருப்பார் அறிவியல் புனைவின் காட்ஃபாதரான ஐஸக் அசிமோவ்.

"வேற்றுகிரகம், அறிவியல் புனைவு என்ற ஆழத்துக்கெல்லாம் போக வேண்டாம், இந்தப் பூமியிலேயே விநோத இனப்பெருக்க முறைகளும் பால்பண்புகளும் கொண்ட பல உயிர்கள் உண்டு" என்கிறார்கள் உயிரியலாளர்கள்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய
பயிர்ச்செய்கையும்
பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலுமா, துன்ஹிந்த, ராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு
கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!